முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் – 197/2013

**வாதி தரப்பு சாட்சி–2 மாணிக்கம் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 21.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

1) தாவா சொத்தில் எனக்கு உரிமை உள்ளதா என்றால் ஆமாம். நான் எனது மகனுக்கு தாவா சொத்தை பொறுத்து தான செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்துவிட்டேன். மேற்படி சொத்தில் எனக்கும் என் மகளுக்கும் உரிமை உண்டு. எனக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால், எனக்கும், எனது அண்ணனுக்கும் பாகம் ஏற்பட்டதன் மூலம் கிடைத்த சொத்து. மேற்படி பாகம் குறித்து தான செட்டில்மென்ட் ஆவணத்தில் எழுதியுள்ளேனா என்றால் அதுபற்றி தெரியவில்லை. எனது உடன் பிறந்தவர்கள் ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன், முத்துச்சாமி மற்றும் நான். மேற்படி பாகம் பத்திரம் மேற்படி நான்கு நபர்களுக்கிடையே ஏற்பட்டதா என்றால், எனக்கும், முத்துசாமிக்கும் இடையே ஏற்பட்டது.

2) மற்ற இருவரும் தனியாக சென்றுவிட்டார்கள். எனக்கும், எனது உடன்பிறந்தவர்களுக்கும் இடையே வேறு பாகம் ஏற்பட்டதா என்றால் இல்லை. ஒரு சொத்து கூட்டுப்பட்டாவாக உள்ளதா என்றால் ஆமாம். ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன், முத்துச்சாமி மற்றும் எனக்கு தனித்தனியாக பட்டா உள்ளது என்றால் சரிதான். பட்டாவில் உள்ள நிலங்களை அவரவர் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்து யாரிடம் இருந்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் பெயர் ஞாபகம் இல்லை. எந்த வருடம் கிரையம் பெறப்பட்டது என்றால், 1975 ல் கிரையம் வாங்கப்பட்டது. தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு ஒப்பந்தம் செய்து கொண்டோமா என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்தம் யார், யார் செய்து கொண்டது என்றால், அதுபற்றி எனது

அண்ணன் முத்துசாமிக்குத்தான் தெரியும். அப்போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். அப்போது எனக்கு சிறுவயது. தற்போது எனக்கு 79 வயது. நான் 1947 ல் பிறந்தேன்.

3) பணம் கொடுத்தது முத்துச்சாமிதான் கொடுத்தாரா என்றால், சீரங்காயி, முத்துசாமி இருவரும் கொடுத்தார்கள். சீரங்காயி எனது சகோதரி. வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் யார், யார் சாட்சி கையெழுத்து போட்டோம் என தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு தொகை கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். குடும்ப பொறுப்புகளை அவர்கள்தான் பார்த்தார்கள். நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பே எனக்கும், எனது சகோதரர்களுக்கும் தனித்தனியாக பட்டா இருந்தது என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்கள் இருந்தது. அந்த சொத்துக்களை தனித்தனியாக அவரவர் அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். கிரையம் ஏற்படுவதற்கு முன்பு சுமார் 10 வருடங்களாக பூர்வீக சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான்.

4) ராசு (எ) ஆண்டியப்பன் அவர் பெயரில் இருந்த பட்டா நிலங்களை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். பழனியப்பன் அவர் பெயரில் இருந்த பட்டா நிலங்களை வா.சா.ஆ.2 ற்கு முன்பு 10 வருடங்களாக அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். என் பெயரில் இருந்த பட்டா நிலங்களை நானும், முத்துச்சாமி அவர் பெயரில் இருந்த பட்டா நிலங்களை அவரும் தனியாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். எனக்கு எவ்வளவு சொத்துக்கள் பிரிந்தது என்றால் சுமார் 3–1/2 ஏக்கர் பிரிந்தது. முத்துச்சாமிக்கு 90 செண்ட் நிலத்தையும், பழனியப்பனுக்கு 70 செண்ட் நிலத்தையும் கொடுத்தேன். நான் முத்துச்சாமிக்கும், பழனியப்பனுக்கும் விற்பனை செய்தது வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு முன்பா அல்லது பின்பா என்றால் முன்பே விற்றுவிட்டேன். தாவா சொத்தின் சர்வே எண் 937/3B 937/3D குறித்து முத்துச்சாமியுடன்

ஒப்பந்தம் செய்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்து குறித்து முத்துச்சாமி எனக்கு ஏதாவது ஆவணம் எழுதிக் கொடுத்தாரா என்றால் இல்லை.

5) எனது வீட்டிற்கும், முத்துச்சாமி வீட்டிற்கும் இடையே சுமார் 1 பர்லாங் துாரம் இருககும். நான் குடியிருக்கும் வீடு எனக்கு பாகம் மூலம் கிடைத்ததா என்றால் ஆமாம். முத்துச்சாமி குடியிருக்கும் வீடு அவருக்கு பாகம் மூலம் கிடைத்தது. வா.சா.ஆ.2 ஏற்படுவதற்கு சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நானும், முத்துச்சாமியும் தனித்தனி வீட்டில் வசித்தோம் என்றால் சரிதான். எனக்கு 29 ம் வயதில் திருமணம் ஆகியது. திருமணம் ஆனதில் இருந்து நான் தனியாக வீட்டில் இருக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு முத்துச்சாமி பெயரில் தனிப்பட்டா உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு தனியாக பட்டா உள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு நானும், எனது மகளும் சென்றோமா என்றால், நான் மட்டும்தான் சென்றேன்.

6) நான் முத்துச்சாமியுடன் சேர்ந்து தாவா சொத்துக்களை கிரையம் பெற்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கும், ராசு (எ) ஆண்டியப்பன் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 100 அடி தொலைவு இருக்கும், பழனியப்பன் வீடு எனது வீட்டிற்கு அருகில் உள்ளது. ராசு (எ) ஆண்டியப்பன் மற்றும் பழனியப்பனுக்கு எப்போது திருமணமானது என்றால், எனது திருமணத்திற்கு முன்பே அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவர்கள் தனித்தனி வீட்டில் தனித்தனியாக சமையல் செய்து இருக்கிறார்கள் என்றால் சரிதான். எப்போது பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால், எனக்கு திருமணம் ஆகி சுமார் 3 வருடத்திற்குள் பாகப்பிரிவினை நடந்தது. எங்களுக்குள் ஒருமுறைதான் பாகப்பிரிவினை நடந்ததா என்றால் ஆமாம்.

7) தாவா சொத்தில் எனக்கு எந்த காலத்திலும் எவ்வித உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றும், வாதிக்கு தாவா சொத்தில் எந்த காலத்திலும்

உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றும், தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் பொய்யான சங்கதியுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**